International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 04 October to December 2022 www.irjtsjournal.org

# கண்டி இராசதானிக்கும் மட்டக்களப்புக்குமான தொடர்பு (வாய்மொழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

திருமதி. கிறிஸ்டினா நிரோஜினி மோசஸ்ரூபன்[#1],
திருமதி. கௌரி லக்சுமிகாந்தன்[*2]

*[#1]விரிவுரையாளர், [*2]சிரேஷ்ர விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்***

*தொல்லியல் ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றைக் கட்டமைப்பதில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. எனினும் இப்பிரதேச மக்கள் மத்தியில் ஏராளமான வாய்மொழிக் கதைகள் கூறப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அக்கதைகளில் பல வரலாற்றுத் தகவல்கள் பொதிந்துள்ளபோதிலும் முழுமையாக அவற்றை வரலாற்று மூலாதாரங்களாகக் கருத முடியாது. வரலாற்று ஆராய்ச்சியில் மரபுவழிக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இதன் பின்னணியில் மட்டக்களப்பில் வழக்கிலுள்ள கண்டி இராசதானி தொடர்பான வரலாற்றுக் கதைகள் சார்பு நிலைப்பட்டதாக காணப்படுகின்றமையை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு சமகால இலக்கிய, தொல்லியற் சான்றுகளின் உதவியூடாக வாய்மொழிக் கதைகளில் பொதிந்துள்ள வரலாற்றுண்மைகளை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது. கண்டி இராசதானிக்கும் மட்டக்களப்பிற்குடையிலான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தொடர்புகளைக் கண்டறிந்து மத்திய கால மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றம்சங்களை வெளிப்படுத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும். களவாய்வுகள் மூலம் பெறப்பட்ட கதைகளை இலங்கை வரலாறு கூறும் பாளி, தமிழ், சிங்கள இலக்கியங்கள், தொல்லியற் சின்னங்கள், வெளிநாட்டார் குறிப்புகள் என்பவற்றுடன் ஒப்பு நோக்கி உண்மைகளைக் கண்டறிந்து, படிப்படியாக வரலாற்றை ஆராய்ந்து கண்டறிகின்ற வரலாற்று அனுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. போர்த்துக்கேயரது காலத்தில் கண்டி இராசதானியின் மேலாட்சியை ஏற்றுக்கொண்ட வன்னிச் சிற்றரசர்களால் ஆளப்பட்ட ஆட்சிப் பிரிவாகவே மட்டக்களப்பு காணப்பட்டுள்ளது. இங்கு அவர்களது வாசஸ்தலமும் அமைந்திருக்கின்றது என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் காலத்தில் மட்டக்களப்புடன் கண்டிக்கிருந்த தொடர்பை வெளிப்படுத்துவதாகவே இம்மன்னன் பற்றிய கதைகள் இப்பகுதிகளில் காணப்பட்டமையைக் கூறமுடியும்.*

முக்கிய வார்த்தைகள்: *வாய்மொழிக் கதைகள், வன்னிமை, சார்புநிலைப்பட்டவை*

## 1.1. ஆய்வு அறிமுகம்

புராதன காலம் முதலாக இலங்கை ஒரு குடையின் கீழ் ஆளப்படாமல் சிறு சிறு அரசுகளாக ஆட்சி செய்யப்பட்டமைக்கு தொல்லியல், இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன. அந்தவகையில் மலயரட்ட என புராதன காலத்தில்

அழைக்கப்பட்ட கண்டிப் பிரதேசமானது மத்திய காலப்பகுதியில் 'கண்டி இராசதானியாக' வளர்ச்சி பெற்றுக் கொண்டது. அதேபோன்று கண்டியுடன் நிலத் தொடர்பினைக் கொண்டிருந்த கிழக்கிலங்கை பிரதேசமானது ஆரம்பத்தில் உரோகணை இராட்சியத்திற்குள் அடங்கியிருந்ததுடன் கதிர்காமச் சத்திரியர்கள் முதலான சுதந்திர ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. அனுராதபுர இராசதானி நிலைபெற்றிருந்த சமகாலத்தில் தீவில் காணப்பட்ட சிற்றரசுகளுள் இவையிரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும்.

கிழக்கிலங்கையில் அமைந்திருந்த மட்டக்களப்பு தேசமும் மலயரட்டயும் புராதன காலத்தில் தொடர்புளைப் பேணியிருந்தமைக்கான சான்றுகளைப் பெறமுடியாத போதிலும், மத்திய காலப்பகுதியில் காணப்பட்ட தொடர்புகளை அறிந்து கொள்ள போதுமான சான்றுகள் கிடைக்கின்றன. அந்தவரிசையில் மட்டக்களப்பில் பேசப்பட்டுவருகின்ற வாய்மொழி வரலாற்றுக் கதைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

வாய்மொழிக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் என்பன வரலாற்று ஆய்வில் சார்பு நிலைப்பட்டவையாக பார்க்கப்படுகின்றன. ஏனெனில் அக்கதைகளில் மிகைப்படுத்தல், திரிபுகள், கதை பேணுபவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், இனமத உணர்வுகள், பக்கச்சார்புகள் என்பன செல்வாக்குச் செலுத்த இடமுண்டு. ஆயினும் இவற்றில் பல வரலாற்று உண்மைகள் அடங்கியுள்ளமை மறுப்பதற்கில்லை. இந்த உண்மைகளை கண்டறிந்து உறுதிப்படுத்த சமகால வரலாற்று இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், தொல்பொருள் ஆதாரங்கள் என்பவற்றை இணைத்துப் பார்ப்பது அவசியமாகின்றது. உலக நாடுகள் பலவற்றில் வாய்மொழி வழக்காறுகளை ஆதாரமாகக் கொண்ட சமூக வரலாறு பற்றிய ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. தென்னாசியா, தென்கிழக்காசியா போன்ற நாடுகளின் வரலாற்றில் வாய்மொழிக் கதைகள் முக்கியம் பெறுகின்றன. தென்கிழக்காசியாவில் கௌடில்யன் - சோமா கதை, இலங்கையில் விஜயன் - குவேனி கதை என்பன முக்கிய எடுத்துக்காட்டுக்களாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமுதாயத்தினரின் வரலாற்றினை அறிந்து கொள்ள மரபுவழிக் கதைகளை ஆதாரமாகக் கொள்ளலாம் என்ற கருத்து 19ஆம் நூற்றாண்டில் அறிமுகமாகியது. ஈ.பி.டைலர் (E.B.Tylor 1832–1917)) என்ற மானுடவியலாளர் தனது முக்கியமான படைப்புக்களாகிய 'Researches into the Early History of Mankind and the Development of Civilization, Primitive Culture' போன்ற நூல்களிலே நாட்டார் வழக்காற்றியற் சான்றுகளை அதிகமாகப் பயன்படுத்தியி ருக்கின்றார்(Tylor,E.B.,1865) வாய்மொழி மரபுகளை ஆபிரிக்காவின் வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படுத்திய வரலாற்றாசிரியர்களில் ஜான்.வன்ஸினா குறிப்பிடத்தக்கவர் (Vansina,J.,1969: 114). இந்தவரிசையில் மட்டக்களப்புக்கும் கண்டி இராசதானிக்குமிடையிலான தொடர்புக ளை வாய்மொழிக் கதைகளை மையமாகக் கொண்டு ஆராய்வதாக இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது.

இலங்கை வரலாற்றில் கண்டி இராச்சியமானது ஏறத்தாள 350 வருடங்கள் (1469-1815) நிலைத்திருந்தது. பாதுகாப்பான புவியியல் அம்சங்களைக் கொண்ட இவ்விராட்சியத்தைப் பற்றி அறிந்து கொள்ள தொல்பொருட் சான்றுகள், ஏடுகள், வெளிநாட்டார் குறிப்புக்கள் (ஜோன் பெய்லி, றொபேட் நொக்ஸ்), ஐரோப்பியர்



© 2022, IRJTSR

கால நிருவாகக் குறிப்புக்கள் என்பன முக்கியமான சான்றுகளாக அமைகின்றன. கண்டி இராச்சியம் தனித்துவமாக விளங்கிய கால கட்டத்தில் மட்டக்களப்பு பிரதேசமானது ஐரோப்பியராட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் கண்டியுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தமையை உறுதிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது. தொல்லியல் ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றைக் கட்டியமைப்பதில் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பல்வேறு வாய்மொழிக் கதைகள் சிறப்பானவையாகும். இதனூடாக குறித்த இப்பிராந்தியத்தின் வரலாற்றினை மீள் உருவாக்கம் செய்ய முடியும்.

### 1.2. ஆய்வின் நோக்கம்

வாய்மொழி வரலாற்றுக் கதைகளை ஆவணப்படுத்துவதுடன், அக்கதைகளில் பொதிந்துள்ள கண்டி இராசதானிக்கும் மட்டக்களப்பிற்குடையிலான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தொடர்புகளை கண்டறிந்து மத்திய கால மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றம்சங்களை வெளிப்படுத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

### 1.3. ஆய்வுப் பிரச்சினை

வரலாற்று ஆராய்ச்சியில் மரபுவழிக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இதன் பின்னணி யில் மட்டக்களப்பில் வழக்கிலுள்ள கண்டி இராசதானி தொடர்பான வரலாற்றுக் கதைகள் சார்பு நிலைப்பட்டதாக காணப்படுகின்றமையை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு, சமகால இலக்கிய, தொல்லியற் சான்றுகளின் உதவியூடாக வாய்மொழிக் கதைகளில் பொதிந்துள்ள வரலாற்றுண்மைகளை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது.

### 1.4. ஆய்வு வரையறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏராளமான வாய்மொழிக் கதைகள் காணப்படுகின்ற போதிலும், ஆய்வுச் சுருக்கம் கருதி கண்டி இராசதானி தொடர்பான கதைகள் மூன்று மாத்திரம் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன.

### 1.5. ஆய்வு மூலங்கள்

ஒரு நாட்டின் அல்லது குறிப்பிட்டதொரு பிராந்தியத்தின் வரலாற்றை தக்க சான்றுகளோடு வெளிக்கொண்டு வருவதில் மூலாதாரங்களுக்கு பங்குண்டு. களவாய்வினூடாகப் பெறப்பட்ட மட்டக்களப்பு கிராமங்களில் வழக்கிலுள்ள கண்டி இராசதானி தொடர்பான வாய்மொழிக் கதைகள் இவ்வாய்வின் பிரதான மூலங்களாகும். இரண்டாம் நிலைத் தரவுகளாக வாய்மொழிக் கதைகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6. ஆய்வின் அணுகுமுறை

வட்டார வழக்கிலுள்ள வாய்மொழிக் கதைகளை நேர்காணல்கள் மூலம் அம்மொழி வழக்கில் பதிவு செய்து அவற்றுக்குரிய பொருள் விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. களவாய்வுகள் மூலம் பெறப்பட்ட கதைகளை இலங்கை வரலாறு கூறும் பாளி, தமிழ், சிங்கள இலக்கியங்கள், தொல்லியற் சின்னங்கள், வெளிநாட்டார் குறிப்புகள் என்பவற்றுடன் ஒப்பு நோக்கி உண்மைகளைக் கண்டறிந்து, படிப்படியாக வரலாற்றை ஆராய்ந்து கண்டறிகின்ற வரலாற்று அனுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.


© 2022, IRJTSR

**2.0 கண்டிக்கும்மட்டக்களப்புக்குமானதொடர்புகள்**

கி.பி 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கண்டி அரசின் கீழ் மட்டக்களப்பு கொண்டுவரப்பட்ட பின்னர் நான்கு உப நிர்வாகப் பிரிவுகளாக அது பிரிக்கப்பட்டு திக்கதிபர்களால் நிருவகிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதற்கென நியமிக்கப்பட்டவர் கள் பற்றி அறிய முடியவில்லை. எனினும் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் உன்னரசுகிரிப் பிரிவு சிங்களப் பிரதிநிதி ஒருவரிடமும் மட்டக்களப்பு (சம்மாந்துறை) பிரிவு பணிக்கர் குலப் பிரதிநிதியிடமும் மண்முனைப்பிரிவு கலிங்கர் குலப் பிரதிநிதியிடமும் ஏறாவூர் - கோறளைப் பிரிவு படையாட்சி குலப் பிரதிநிதியிடமும் இருந்தமைக்கான தகவல்கள் கிடைக்கின்றன. ஏறாவூர்- கோறளைப் பிரிவு வெருகலாறு மற்றும் மன்னன்பிட்டி வரை பரந்திருந்தது எனலாம். பொலநறுவையில் நியம அதிபனாக மாருதசேனன் என்ற கலிங்கனே பொறுப்பில் இருந்தான் என மட்டக்களப்பு பூர்வ சரித்திரமும் குறிப்பிடுகின்றது.

போர்த்துக்கேயரது காலத்தில் கண்டி இராசதானியின் மேலாட்சியை ஏற்றுக்கொண்ட வன்னிச் சிற்றரசர்களால் ஆளப்பட்ட ஆட்சிப் பிரிவாகவே மட்டக்களப்பு காணப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர் மட்டக்களப்பின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றியிருந்தபோதிலும் அதன் மேற்குப் பகுதி (படுவான்கரைப் பிரதேசம்) அவர்களது கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்கவில்லை என்பதற்கு இக்கதைகள் சிறந்த சான்றுகளாகும். அதாவது எழுவான்கரைப் பகுதி போர்த்துக்கேயரது கட்டுப்பாட்டின் கீழும், படுவான்கரைப் பகுதி கண்டி இராசதானியோடும் நெருக்கமான தொடர்பினைப் பேணியிருந்தது எனலாம். இராஜசிங்கன் (கி.பி 1581-1593) சீதாவாக்கையின் அரசனாக இருந்த காலத்தில் போர்த்துக்கேயரைத் துரத்த ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்தான். ஒப்பந்தத்தில் போருக்கான படை, பண உதவி என்பவற்றுக்குப் பதிலாக கரையோரப் பகுதிகளை வழங்குவதாக வாக்களித்தான் (1638). இவ்வாறு கூறப்பட்ட கரையோரப் பகுதியுள் மட்டக்களப்பும் உள்ளடக்கப்பட்டது.

16 ஆம் நூற்றாண்டில் கண்டியரசனின் சபைக்குச் சென்ற கத்தோலிக்க பாதிரி சைமோவே டி கொயிம்ரா என்பவர் கோவாவிலுள்ள போர்த்துக்கேய ஆளுனருக்கு எழுதிய கடிதத்தில் "கண்டி மன்னனின் அரசசபையில் மட்டக்களப்பு மன்னனின் தூதுவர்கள் இருப்பதை அவதானிக்க முடிந்தது" என்கிறார். மேலும் அவர் போர்த்துக்கேய மன்னனுக்கு (1546) எழுதிய கடிதத்தில் கண்டியிலிருந்து மட்டக்களப்பிற்குச் சென்ற போது கண்டி மன்னனின் நண்பன் மட்டக்களப்பில் இருந்ததாகவும் அம்மன்னனின் இராச்சியத்துக்கு தான் சென்றதாகவும் குறிப்பிடுகின்றார் (வெல்லவூர் கோபால், 2011:90). ஆனாலும் மட்டக்களப்பு மன்னன் பற்றிய குறிப்புகள் இக்கடிதத்தில் இடம்பெறவில்லை. இவர்கள் போடிக் கல்;வெட்டில் குறிப்பிடும் காலிங்காகுடியின் முன்னோராக இருக்கலாம் என்ற முடிவிற்கு வரமுடிகின்றது (ம.பூ.ச.:75)

விமலதர்மசூரியன் மட்டக்களப்புடன் (1590-1604) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான். கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலில் வன்னிமைக்கும் வேளாளருக்கும் இடையில் திருப்படை நிகழ்வில் பிணக்கு ஏற்பட்ட போது மன்னன் கலந்து கொண்டுள்ள செய்தி கொக்கட்டிச்சோலை பாடல்களில் இடம்பெற்றுள்ளது. போர்த்துக்கேயர் ஆலயங்களை அழித்த காலத்தில் அம்பிளாந்துறை, பழுகாமம் முதலிய வன்னிமைகளின் உதவி கண்டி மன்னனின் பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் ஊர் வரலாறுகள் எடுத்துரைக்கின்றன.

17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட றொபட் நொக்சின் இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு (An Historical Relation of the Island Ceylon) என்ற நூலில் "திருகோணமலையோடு இணைந்திருந்த கொட்டியாரமும் மட்டக்களப்பும் நான் அங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் ஒல்லாந்தர் வசம் காணப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (Robert Knox, 1681:4).

பி.ஈ.பீரிஸ் அவர்கள் தனது வரலாற்று நூலில், ஆரம்பகாலத்தே மட்டக்களப்பில் தோற்றம் பெற்ற மூன்று முற்குக வன்னிமைகளின் சந்ததியினரே விந்தனை


© 2022, IRJTSR

தவிர்ந்த அனைத்து மட்டக்களப்புப் பிரதேசத்தையும் தொடர்ந்து அதிகாரம் செலுத்தினர் எனக் கூறுகின்றார். இதன் மூலம் மட்டக்களப்புப் பகுதியானது எக்காலத்திலும் அன்றி குறிப்பிட்ட சில காலப்பகுதியிலேயே கண்டியுடன் தொடர்பு கொண்டிருந்தமை உறுதியாகின்றது.

### 3. கதை I: ஆலப்புள்ள கதை

ஊர் : கொக்கட்டிச்சோலை

விக்கிரமராசசிங்கன் எண்ட ஒரு மன்னன் கண்டிய ஆச்சி செஞ்சான். அப்ப வெள்ளக்கார ஆக்கள் இலங்கையில பல இடங்களப் புடிச்சி ஆச்சி செஞ்சிகொண்டிருந்தாங்க. அவங்களால கண்டியப் புடிக்க முடியல்ல. அவண்ட படைக்கி ஆலப்புள்ள எண்டவன் படத்தளபதியா இருந்தான். அவனுக்கு ஒரு மருமகள். அழகான பொம்புள்ள. அவள்ர தலமுடி 60 அடி நீளமாம். ஆவள்ர பேர் பூசணியாள். ஒரு நாள் மன்னன் ஆலப்புள்ளயிர ஊட்ட போனப்ப பூசணியாள் குளிச்சிக்கொண்டிருந்தாள். அப்ப மன்னன் அவள்ர காலக் கண்டுத்தான். அவள்ர கால் இவ்வளவு அழகா இருந்தா அவள் எப்பிடி அழகா இருப்பாள் எண்டு எண்ணி அவளக் களியாணம் கட்ட ஆசப்பட்டான். ஆலப்புள்ள தான் பூசணியாளக் கட்டுறத விரும்பமாட்டான் எண்டதால ஆலப்புள்ளய ஒரு நாள் வெள்ளக்காரனுகளோட போர் செய்யிறதுக்கு அனுப்பிப்போட்டு அந்த நேரம் பாத்து பூசணியாள்ர ஊட்டுக்கு அவளக் கொண்டுபோக வந்தான். ஆனா அவள் அதுக்கு மறுத்துப்போட்டு அவனிட்ட இருந்து தப்பி ஓடித்தாள். புறகு ஆலப்புள்ளயிர புள்ளைகளப் புடிச்சிக் கொண்டுபோட்டு அவங்கள உரல்ல போட்டு தாய உலக்கயால குத்த உட்டான். புறகு அவளயும் கொல செஞ்சான்.

மன்னனிட்ட இருந்து தப்பி மாமனாரிட்ட ஓடின பூசணியாள் ஆலப்புள்ள இல்லாததால தன்ட தலயில தேசிக்காயக் கட்டிப்போட்டு கடல்ல உழுந்து செத்துப்பெயித்தாள். புறகு மாமனார் அவள்ர உடலக் கண்டுபுடிச்சி அடக்கம் செஞ்சாரு. புறகு ஆலப்புள்ள வெள்ளக்காரனுகளோட சேந்துத்தாரு வெள்ளக்காரனுகளயும் கூட்டிக்கொண்டு அவரு கண்டிக்கு தண்ட ஊட்ட வந்தப்ப அங்க மன்னன் தண்ட பொஞ்சாதி புள்ள குட்டிகளக் கொல செஞ்சிபோட்டு இருந்தான். அப்ப ஆலப்புள்ள போய் அவனப் புடிச்சி அடிச்சிக் கொல செஞ்சான். புறகு வெள்ளக்காரனுகள் ஆலப்புள்ளயத் தங்கட ஊருக்குக் கூட்டிப் போவதாகக் கூறிக் கூட்டிப் போனாங்க. கடல்ல கப்பல்ல போய்க்கொண்டிருக்கக்குள்ள வெள்ளக்கார ஆக்கள் பாத்தாங்க இவன் கடும் ஆள். மன்னனையே கொல செஞ்சவன். மன்னனக் காட்டிக் கொடுத்தவன். இவன உசிரோட உடக் கூடா எண்டுபோட்டு அவன கடல்ல தள்ளிச் சாகடிச்சிப் போட்டாங்க.

### வாய்மொழிக் கதையினை உறுதிப்படுத்தும் சான்றுகள்:

கண்டியை ஆட்சி செய்த கடைசி மன்னனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பற்றிய விடயங்களை கண்டிராசன் ஒப்பாரி, கண்டிராசன் ஊஞ்சல், கண்டிராசன் கூத்துப் பாடல்கள் மூலம் அறியலாம். இவ்விலக்கியங்கள் ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பெண்ணாசை கொண்டதனால் ஏற்பட்ட தீய விளைவுகளையும் இறுதியில் விக்கிரமராசசிங்கன் அவனது தளபதி ஆலப்பிள்ளையால் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டதையும் விபரிக்கின்றன. இவ்விலக்கியங்களில் வருகின்ற ஆலப்பிள்ள என்பது 'எகலப்பொல' என்ற சிங்களப் பெயரின் வட்டார பேச்சு வழக்குப் பெயராகும்.

ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் பூர்வீகம் தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூராகும். விஜயநகரப் பேரரசில் மூன்றாம் வேங்கட மன்னன் பரம்பரையில் வந்த தெலுங்கு நாயக்கர் வம்சத்தை சேர்ந்தவன். பெற்றோர் வேங்கடப் பெருமாள், சுப்பம்மாள் ஆவர். பெற்றோர் இட்ட பெயர் கண்ணுச்சாமி. கண்ணுச்சாமியை கண்டிக்கு

வரவழைத்து மல்லத்த தேரரிடம் அனுப்பி தமிழ், பௌத்தம், சிங்களம் ஆகிய வித்தைகளை படிக்க வைத்தனர். 1798 இல் அரசாட்சி ஏறிய மன்னனுக்கு உதவியாக இருந்த அரசியல் அதிகாரிகளான பிலிமத்தலாவ, எகலபொல ஆகியோர் திட்டமிட்டு அரசியல் சதியில் ஈடுபட்டனர்.

எகலபொல என்பவன் மிக முக்கிய அதிகாரம் பெற்ற பிரபுவாக விளங்கினான். இவனுக்கு மட்டக்களப்பு, பாணம, நுகரகலாவிய, தம்பலகமுவ முதலிய இடங்களுக்குரிய ஆள்பதிப் பதவியை ஸ்ரீ விஜய ராஜசிங்கன் வழங்கியிருந்தான். பிலிமத்தலாவ நரேந்திர சிங்கன் காலத்தில் நியமிக்கப்பட்டான். இவனுக்கும் எகலப்பொலவிற்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. ஆனாலும் 2ஆம் அதிகாரப் பொறுப்பை சமணக்கொட்டிக்கு வழங்கியமையால் கண்டியரசில் மறைமுக சிக்கல்களைத் தோற்றுவித்தது. சமணக்கொட்டிக்கும் எகலப்பொலவிற்கும் இடையிலுள்ள பகைமையினால் ஆங்கிலேயரிடம் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை காட்டிக் கொடுத்து கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைய எகலப்பொல காரணமானான்.

எகலப்பொல ஆங்கிலேயர் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தான். இதனால் இவன் குடும்பத்தை மன்னன் சிறையிலடைத்தான். எகலப்பொல கண்டியை நோக்கி தனது படையை முன்னேற்றிய போது அமைச்சர் பிலிமத்தலாவ மற்றும் மொல்லிக்கொட என்போர் மன்னனுக்கு மதுவைக் கொடுத்து அவன் கோபத்தை உச்சப்படுத்தி எகலப்பொலவை பழிவாங்க ஆலோசனை கூறினர். இதன்படி மன்னன் எகலப்பொலவின் பிள்ளைகள் நால்வரையும் பிடித்து அவர்களின் தலைகளை சிரச்சேதம் செய்தான். பின்னர் தாயையும் அவளுடன் இருந்த இருவரையும் கல்லுடன் கட்டி நுவர வாவியில் தூக்கியெறிந்து ராஜதுரோகத் திற்குரிய தண்டனையை நிறைவேற்றினான் (1814). இப்பின்னணியில் தான் மக்கள் ஆங்கிலேயரை ஆதரிக்கத் தொடங்கினர். பின்பு தலைமறைவாகிய மன்னனை ஆங்கிலேயர் சிறைபிடித்து வேலூர் சிறைச்சாலைக்கு (இந்தியா) அனுப்பினர்.

**4. கதை 2: அறுமக்குட்டி போடி**

ஊர் : கிரான்குளம்

**அறுமக்குட்டிப்போடி (கதை வடிவம் 01)**

கிரான்குளத்தில் பொறந்து அம்பிளாந்துறப் பொம்பளயக் களியாணம் முடிச்சித்தான் அறுமக்குட்டிப் போடி அம்பிளாந்துறைக்கு வந்தவரு. கிரான்குளத்தில இருந்து வந்திருந்தாலும் அவரு அம்பிளாந்துறயில பெரிய தலக்கட்டா இருந்தவரு. மட்டக்களப்பில வன்னிம ஆச்சி நடந்த காலத்தில அறுமக்குட்டி போடி தான் கிழக்கு மாகாணத்தில இருந்த இடங்களுக்கெல்லாம் பெரிய ஆள். அவர்ர சொல்லுக்குத்தான் எல்லோரும் நடக்கொணும். அவரு போடுறதுதான் சட்டமா இருந்திக்கு. அவரு வேகமான ஆள். கிரான்குளம், அம்பிளாந்துறையில சனங்களக் குடியேத்தி வெச்சவரு அவர்தான். இவரெண்டா குஞ்சிலாப்போடி வன்னியனாருக்கும் பயந்தான். இவர்ர காலத்திலதான் அம்பிளாந்துற புள்ளயார் கோயில் கட்டப்பட்ட. அவர்ர சொல்லுப்படிதான் எல்லாம் நடந்த. அதுமட்டுமில்ல வெள்ளக்காரண்ட ஆச்சிக் காலத்தில இஞ்ச அம்பிளாந்துறயில அவருக்கு எதுப்பு வந்துத்து. அவரக் கொல்றதுக்கு எதுத்து வந்த அஞ்சாறு பேரு வெள்ளக்காரனுகள அடிச்சித் தாட்டுப்போட்டு கண்டில போய் ஒழிச்சித்து இருந்தவராம். அவரு அம்பிளாந்துறயில பெரிய ஆளா இருந்ததுக்கு அடயாளமா பறப்பத்தண்ணன் வச்சிருந்த இராச மோளதடதுல அறுமக்குட்டிப் போடி எண்டு அவருட பேரு எழுதியிருந்த. இப்ப அந்த ராச மோளத்த அவனுகள் வித்துத் திண்டுத்தானுகள்.

**அறுமக்குட்டிப்போடி (கதை வடிவம் 02)**

அறுமக்குட்டிப்போடி எண்டு ஒருவர் வாழ்ந்தார். இவர் காலிங்கா குடி. சேரியான பலசாலி, கனக்கக் கோயில்கள கட்டி இருக்காரு, அறிவுள்ளவரு. இந்த

அறுமக்குட்டிக் போடிக்கு பல பொஞ்சாதிமார் இருந்திருக்காங்க. இவருக்கு அம்பிளாந்துற, கிரான்குளம் எண்டு பல ஊர்களில பொஞ்சாதிமார் இருந்திரிக்காங்க. அவங்கட பேரு தெரியா. ஆனா மகன் மண்முனப்போடி எண்டு தெரியும். இவரிட மகள குஞ்சித்தம்பி வன்னியனார் களியாணம் செஞ்சிருந்தாரு. இந்த அறுமுக்குட்டிப் போடி இருந்த இடம் அம்பிளாந்துறையில பெரிய குடியிருப்புப் பகுதியில இரிக்கிற கிட்டங்கி வளவு. பறயன் சித்திரை வருட கைமுழுத்தத்திற்கு வந்து கோயிலடியில முதல் தவில் அடிப்பான். பொறகு இந்த கிட்டங்கி வளவில அடிப்பான். இந்த நடமுற பழய காலமிருந்து வருது. அது அரசர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையாம் எண்டு சொல்லுவாங்க. அதுக்கு பொறகுதான் ஊடு ஊடா அடிப்பானுகளாம். இந்த கிட்டங்கி வளவில அறுமக்குட்டிபோடி, குஞ்சிலியாப்போடி, கந்தப்போடி எண்டு இருந்திருக்காங்க. இத வளச்சிக் காடு இருந்ததாம். வெள்ளக்காறத் தொர இங்கு வந்துதான் அவங்களச் சந்திப்பானாம்.

குஞ்சித்தம்பி வன்னியண்ட அப்பனுக்கும் அறுமக்குட்டிப் போடிககும் செரியான போட்டி இருந்து வந்திச்சாம. இத சமன் செய்ரத்துக்காக குஞ்சித்தம்பி வன்னியனார அறுமக்குட்டிப் போடிர தங்கச்சிக்குக் களியாணம் முடிச்சி வச்சாங்களாம். அறுமக்குட்டிப்போடி அவருக்குச் சரியான சீதனமும் கொடுத்தாராம்.

## வாய்மொழிக்கதையினை உறுதிப்படுத்தும்சான்று :

1728 காலப்பகுதியில் பஸ்கோல் முதலி மட்டக்களப்பு திமில தீவில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட செய்தி கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கு அறிவிக்கப்பட்டது. இதனை விசாரித்து ஒல்லாந்தரிடம் மட்டக்களப்பு முக்குலத்தோரைத் தவிர அந்நியர்கள் இராச அதிகாரிகளாக நியமிக்கப்படக் கூடாது என அரச பட்டயத்தில் எழுதினார்கள். மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட செய்தி, பஸ்கோல் முதலிக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு என்பன பஸ்கோல் முதலி வரவு, விஜயராஜசிங்கன் தீர்ப்பு பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது (பக் 48, 49). அதேசமயம் கத்தோலிக்க குருமார் மட்டக்களப்பு, கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இருக்கக்கூடாது என்பதற்கான ஒப்பந்தம் ஒல்லாந்தருக்கும் இராஜசிங்கனுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பிலான கருத்துக்களையும் இந்நூல் எடுத்தியம்புகிறது (பக்கம் 47,48).

பஸ்கோல் முதலி சிறை வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அறுமக்குட்டிப்போடியும் கந்தப்போடியும் ‘போடி’ நியமனம் பெற்றனர் (1766). கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் முடிசூட்டு விழாவுக்கு அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி இருவரோடும் முக்குலத்தவரின் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர். மன்னனுக்கு அறுமக்குட்டிப்போடி வைர மாலையும் கந்தப்போடி வராகன் மாலையும் அளித்தனர்.

கந்தப்பனும் அவனது சகோதரிகளும் 7 கண்ணகை அம்மன் விக்கிரகங்களை மட்டக்களப்புப் பகுதியில் நிலைநிறுத்த வந்த செய்தி விமலதர்மசூரியனுக்கு அறிவிக்கப்பட்ட போது மன்னன் உத்தரவில்லாமல் வந்தவர்களை தாட்டுக் கொல்லவும் அவன் புத்திரியை காலிங்க குலத்தவன் ஒருவனுக்கு மணஞ் செய்து வைக்கவும் கண்ணகை விக்கிரகங்களை பிரதான ஊரிலமர்த்தவும் மன்னன் உத்தரவு வழங்கிய செய்தி மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் ஓத்துக்குடா கந்தப்பன் சரித்திரத்தில் (பக்கம் 47) குறிப்பிடப்பட்டுள்ளது.

அறுமக்குட்டிப்போடியார் செட்டிபாளைத்தில் கண்ணகி அம்மனை பிரதிஸ்டை செய்த செய்தியும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் மட்டக்களப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் கண்டியில் விமலதர்மசூரியனின் ஆட்சியும் நிலவியது. ஒல்லாந்தர் மட்டக்களப்பை இருபாகஞ் செய்து வடக்கை அறுமக்குட்டிக்கும் (எருவில்பற்று, போர்முனைப்பற்று, மண்முனைப்பற்று, கோரளைப்பற்று), தெற்கை கந்தப் போடிக்கும் (கரவாகுப்பற்று,

சம்மாந் துறைப்பற்று, அக்கரைப்பற்று, பாணகைப்பற்று, உன்னிசைகிரி) நியமனஞ் செய்தனர். மட்டக்களப்பில் வங்கர், கலிங்கர், சிங்கர் என்பவர்களுக்கிடையில் முக்குகச் சட்டத்தை ஒல்லாந்தர் உண்டாக்கிய போது காலிங்க குலமான அறுமக்குட்டிப்போடி முன்னுரிமை பெற்றார். அறுமக்குட்டிப் போடியை நிலைமைப் போடியாய் தெரிவு செய்து கண்டிக்கு அனுப்பினர். இவரது காலத்திலே தோம்புதோர் உத்தியோகம், மாடுகளுக்கு குலவிருதுக்குறியிடும் முறை ஏற்படுத்தப்பட்டமை ஆகியவை சிறப்புக்களாகும்.

கண்டி மன்னரின் ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு இருந்த போது மட்டக்களப்பில் மிகச் செல்வாக்குடன் இருந்தவர். அறுமக்குட்டிப்போடியின் காலத்தில் வன்னிமைப் பதவியில் இருந்தவர் குஞ்சிலாப்போடி வன்னியர் ஆவார். மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலே போடி கல்வெட்டு என்றொரு பாடற்பகுதி உண்டு. அதில் அறுமக்குட்டிப் போடி என்னும் உயர் பதவி வழங்கியமைப் பற்றி அந்நூல் மேல்வருமாறு கூறுகின்றது.

"சங்க மொன்றியற்றித் தலைமையாய் வைத்து
போத்து நாட்டரசன் குகன் புகழ் பரப்பி
காத்தனர் இராசகுடும்பமாய் வைத்து
நிலைமையாய் எங்களை நிரூபித்த பின்பு
தலைமையாயிருந்தோம் தாரணி மகிழ
ஒல்லாந்தரசே உமக்கிது உரைத்தோம்.
பொல்லாங்ககற்றிப் போடியாய் வைத்தால்
செந்நெல் செழிக்குந் தேன்சொரிந் தொழுகும்
மன்னர் மகிழ மண்முனை தனக்கும்
என்றிடக் குகனும் ஏந்தலன் மகிழ்ந்து
பண்டுமுன் முறைமை பகுக்க வென்றெண்ணி
அறுமக்குட்டியை அழைத்திடச் செய்து
பெறு முன்னரசு பெருமையாய் வழங்க
போடி யென்றுரைத்துப் புகழ் பெற்றிருந்து
நாடுகள் தெரிய நன்முறை சாற்றி ………………..
கதி பெறு ஒல்லாந்தர் கட்டளை
கொடுத்து மட்டக்களப்பும் மண்முனைப்பற்றும்
திட்டப்படுத்திச் சிற்றரசாக்கி
வைத்தனனிந்த மாநகர் தன்னில்"

முக்குவரினத்தைச் சேர்ந்த காலிங்கா குலத்துப் போடிகள் பரம்பரை பரம்பரையாக மட்டக்களப்பு, மண்முனை என்னும் பகுதியிலே ஆட்சி புரிந்தவர்கள், வன்னிமை, நிலமைப்போடி என்னும் பட்டங்களை அவர்கள் பெற்றிருந்தவர்கள், காலகாலமாகச் செம்மையாகப் பரிபாலனம் செய்தவர்கள். அவற்றின் காரணமாகக் கண்டிச் சிங்கள மன்னர்களும் போர்த்துக்கேயரும் அறுமக்குட்டிப் போடியின் முன்னோர்களுக்குப் பதவிகளையும் அதிகாரங்களையும் வழங்கினார்கள். அவற்றை அறிந்து, பழைய வழமைகளை நிலைநாட்டும் எண்ணத்தோடு ஒல்லாந்தர்கள் அறுமக்குட்டியைப் போடியாக நியமித்தார்கள். போடி என்பது ஒரு நிர்வாகப் பதவிப் பெயராகவும் வழங்கி வந்துள்ளமை அதனாலே தெளிவாகின்றது.

மட்டக்களப்பு முஸ்லிம்களுடைய நாட்டுப்பாடல்களிலும் வன்னிமை பற்றிய குறிப்புகள் உள்ளமை கவனத்தற்குரியது. அப்பிராந்தியத்து வன்னிபம் ஒருவனைப் பற்றி மேல்வரும் பாடற்பகுதியுண்டு.

"கண்டி நகர் காலி, மாத்தறை
காவல் கண்டீர் நாகபட்டினம்
தொண்டியூர் திருஏரியா
திருகோணமலைச் சேரியும்
வண்டுலாவிய கிண்ணியா
வதுவிநாடறிய சதுராசிமலை

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*
© 2022, IRJTSR

எங்கும் எங்குமே அவர் புகழ்
எங்கும் எங்குமே துதிக்க
சீர்புகழ் செழித்த மன்னவர்
தென்பகுதிக் கிழக்கு
சிங்க மகாராசா வன்னுமை
பார்புகழ் மீராலெவ்வைப்போடி வன்னிமை
நாலு திக்கும் பிரபல்யமாகினார்
சீர்புகழ் செழித்த மன்னவர்”

இந்தப் பாடல் மீராலெவ்வை என்ற பெயருடைய வன்னிபம் பற்றியதாகும். வன்னிபத்தைப் போடி என்றும் பாடல் குறிப்பிடுகின்றது. சிங்கமகாராசா வன்னிமை என்பது பாட்டுடைத் தலைவனுக்குரிய பட்டப் பெயர் போலும் அவரைப் பற்றித் தென்பகுதிக் கிழக்கு என்னும் அடைமொழி காணப்படுவதால் மீராலெவ்வை மட்டக்களப்பு தேசத்தின் தென்பகுதியிலே அதிகாரஞ் செலுத்திய வன்னிபமாதல் வேண்டும்.

வன்னியர்கள் சுயாட்சியதிகாரங்கொண்ட சிற்றர்களான விளங்கினர். நிர்வாகம், நீதிபரிபாலனம், வேளாண்மை, ஆலயத் தொழும்புகள் என்பன பற்றிய ஏற்பாடுகளை அவர்கள் கண்காணித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் படைகளை வைத்திருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாகக் கிழக்கிலங்கை வன்னிமைகள் மீது கண்டி அரசரின் மேலாதிக்கம் ஏற்பட்டது.

கொட்டியாரம் முதலாகப் பாணமை வரையிலுள்ள வன்னியர்கள் ஆண்டுதோறும் கண்டி மன்னனுக்கு யானை, தேன், மெழுகு முதலியவற்றைத் திறையாகக் கொடுக்க வேண்டும். போர்க்காலங்களிலே படைகளைத் திரட்டிக் கொடுப்பதோடு போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினர். ஜயவீர பண்டாரனுக்கு எதிராக விமலதர்மன் போர் புரிந்த காலத்தில் வன்னியர் ஜயவீரனுக்கு ஆதரவு புரிந்தார்களென்று ஒல்லாந்த பாதிரியாரான பிலிப்பூஸ் வோல்டே (Philippus Baldaeus) குறிப்பிடுகிறார். பழுகாமத்து வன்னியன் 5890 படைவீரர்களையும், 1000 கூலியாட்களையும், 25 அலியன் யானைகளையும், 3 போர் யானைகளையும் அனுப்பி வைத்தான். மட்டக்களப்பு வன்னியன் 9,800 போர் வீரர்களையும், 2,000 தொழிலாளரையும், 2.500 மாடுகளையும், 30 அலியன் யானைகளையும், 4 போர் யானைகளையும் அனுப்பியிருந்தான். பாணமை முதலான ஏனைய பற்றுகளைச் சேர்ந்த வன்னியர்கள் 59,896 படையினரையும், 2,140 தொழிலாளரையும், 16,000 மாடுகளையும், 63 அலியன் யானைகளையும் அனுப்பினார்கள் என்று சொல்லப்படுகின்றது. வன்னியர்களில் ஒவ்வொருவரும் கணிசமான அளவிற் படைகளை வைத்திருந்தனர் என்பது அவருடைய குறிப்பால் உணரப்படுகின்றது.

ஒல்லாந்தரின் கடற்படைத் தளபதியான ஸ்பில்பேர்கென் (Spillbergen) கண்டி மன்னனோடு தொடர்பு கொள்ளும் நோக்கத்தோடு 1602-1603 ஆகிய காலப்பகுதியில் இரு தடவைகள் மட்டக்களப்புக்கு வந்தான். இரண்டாவது தடவையாக வந்த பொழுது மட்டக்களப்பு வன்னிபமான தர்மகங்காதரனுடன் தொடர்பு கொண்டான்.

கி.பி 1611இல் ஏரியின் மூலமான போக்குவரத்துகள் பற்றிய கடவு வரிகள் தொடர்பாக பழுகாமம், போரதீவு ஆகிய பகுதிகளின் வன்னியரிடையே தகராறு ஏற்பட்டது. அதனை ஆராய்ந்து தீர்ப்பதற்கு இராசதானியில் அரசசபை கூடியது. அங்கே கொட்டியாரத்து வன்னிபமான இடலி, பழுகாமத்து வன்னிபம் செல்லபண்டாரம், மட்டக்களப்பு வன்னிபம் குமார பண்டாரம், போரதீவு வன்னியம் தர்மசங்கரி, பாணமை வன்னிபமான சமரவாய் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர். செல்லபண்டாரம், தர்மசங்கரி ஆகிய வன்னிபங்கள் இருவரும் பகைமையான நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், அல்லாதவிடத்து அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.


© 2022, IRJTSR

மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் இறுதிக் காலத்தில் (1798-1815) கரையோரப் பிரதேசங்கள் யாவும் ஒல்லாந்தரிடமிருந்து பிரித்தானியர் வசமானது. இக்காலத்தில் புளியந்தீவில் இருந்த வன்னிப்படைகளுக்கு கண்டி மன்னன் படையுதவி வழங்கி 3 மாதங்கள் ஆங்கிலேயர் நுழையாமல் தடுத்தான்.

### 5. கதை - 03: புராதன பழுகாமக்கிராமமும் கண்டி அரசர்களின் கோடைகாலவாசஸ்தலமும்

இடம்: மட்டக்களப்பு, பழுகாமம்

இராசசிங்கமன்னன் ஒருநாள் தன்ட பரிவாரங்களோட கரவெட்டி காட்டுப் பக்கமா பயணம் செஞ்சார். அந்;தப் பக்கம் வேடர்கள் வாழ்ந்து வந்தாங்க. அரசன் அவர்களின் குறைகளை கேட்டறிவதற்காக அங்கு போனான். அங்க ஒரு குடிசையில ஒரு அழகான பொம்புளயக் கண்டு அவள் மீது அடங்காக் காமம் கொண்டு அவளத் தன்ட குதிரையில் ஏற்றி தன்ட பரிவாரங்களோட பழுகாமத்துக்கு வந்தான். இத அறிந்த வேடர்கள் பழுகாமத்திற்கு வேகமா வந்தனர். வேடர்கள் வருவதை அறிந்த அரசனும் அவன்ட ஆக்களும் கேணிக்கரை பிள்ளையார் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில பெரும் படையலோட பூசை செய்து தாங்க வந்த விடயம் என்னவென்று கேட்டான். அப்போ அந்தப் புள்ளட தந்தையான பளுவன் நாங்க எங்கட மகள் வடிவழகியை தேடி வந்தனாங்க என்டு சொன்னாங்க. அதக்கேட்ட அரசன் நான்தான் உங்கட மகளை கலியாணம் கட்ட கொண்டு வந்தனான் என்டான். இதக்கேட்ட பளுவன் சந்தோஸப்பட்டு அரசன கும்பிட்டான். அரசன் அவர்கள் களைப்புத்தீர தண்ணியும் சாப்பாடும் கொடுத்தான். சாப்பட்ட பிறகு பழுவன் தன்ட மகள் தன் இனசனங்களை விட்டு பிரிந்து வாழமாட்டாள் என்டு சொல்ல அதக் கேட்ட அரசன் வடிவழகியின் இனசனங்கள் ஏழு குடும்பங்களையும் கரவெட்டியிலிருந்து கொண்டு வரும்படி சொல்லி அவர்களையும் பழுகாமத்தில் குடியமர்த்தினான். வடிவழகியையும் பண்டகசாலையில் பக்குவமான ஓரிடத்தில் வைத்து வாழ்க்கை நடத்தினான்.

அரசனும் மனைவியும் சுகபோகங்களை அனுபவித்து வாழ்ந்து வரும் நாளில் மனைவி வடிவழகி சுகவீனமடைய அரசன் தன் பரிபாலத்திலிருந்து அரச வைத்தியர் முதலானோர் வைத்தியம் செய்து வருத்தம் குணமடையவில்லை இதனால் அரசன் மனமுடைந்தான். இந்த நேரத்தில மாவேற்குடாவில் அத்தியாகுடி வைத்தியனார்குடி வேளாளருடன் வசித்து வந்த மதுரை வடக்கு வாயில் பூபாலகோத்திரம் அவர்கள் அரசனைக்காண வந்தார். அரசனின் மன வருத்தத்துக்கான காரணத்தை அறிந்த பூபாலகோத்திரம் அரசனை நோக்கி நீங்க விரும்பினால் என் பரிபாலனத்தின் கீழ் உள்ள வைத்தியரை கொண்டு வைத்தியம் செய்யலாம் என்று கூறியதோடு தரமான வைத்தியர் என்றும் சொன்னார். அரசனும் வைத்தியரை அழைத்து வந்து வைத்தியம் செய்ய நோய் நீங்கியது. அதைக் கண்டு சந்தோசப்பட்ட அரசன் வைத்தியருடன் அன்பாகவே அவருக்கும் அவரின் இனத்தவருக்கும் மாவேற்குடாவில் குடியிருப்பதில் உள்ள கஷ்டங்களை கருத்தில் எடுத்து அவர்களை பழுகாமம் கிராமத்தில் வந்து வாழும்படியும் குடியிருக்க வளவுகளும், ஏழு வயல்களும் திரௌபதி அம்மன் ஆலயத்தில் பங்குரிமையும் வழங்கினார். வைத்தியம் செய்த வைத்தியருக்கு விசேடமாக ஒன்பது ஏக்கர் விசாலமான பலிகாலி வயல் மானியமாக வழங்கினான்.

### வாய்மொழிக் கதையினை உறுதிப்படுத்தும் சான்று :

கி.பி 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதலாக கண்டி அரசுக்கும் மட்டக்களப்பு பிராந்தியத்திற்குமிடையில் தொடர்புகள் காணப்பட்டுள்ளன. மட்டக்களப்பானது புவியியல் ரீதியாக படுவான்கரை (சூரியன் மறையும் பகுதி), எழுவான்கரை (சூரியன் உதிக்கும் பகுதி) என வாவியை மையமாகக் கொண்டு அழைக்கப்பட்டது. போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியபோது மட்டக்களப்பின் எழுவான்கரைப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். ஆனால் படுவான்கரைப் பகுதிகளில் கண்டி மன்னர்களின் அதிகாரம் நிலவியுள்ளமைக்குச் சான்றுகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம்



© 2022, IRJTSR

கண்டியுடன் நிலரீதியான தொடர்பினைக் கொண்ட பகுதிகளாக மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகள் அமைந்திருந்தமையாகும். 17 ஆம் நூற்றாண்டுகளில் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் (கி.பி 1604 ஆம் ஆண்டு முதலாக) கண்டி அரசர்கள் மட்டக்களப்புடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தனர். இவனது மகன் இரண்டாம் இராஜசிங்கன் தமது ஆட்சிக்காலத்தில் படுவான்கரையில் அமைந்துள்ள இடமான பழுகாமத்தை தன் கோடைக்கால வாசஸ்தலமாக கொண்டிருந்தான். இங்கு ஓர் அரச பிரதானி நியமிக்கப்பட்டார். இன்றுவரை இப்பகுதிகளின் ஊடாகக் கண்டிக்கு குறைவான நேரத்திற்குள் செல்வதற்கான பாதையானது புழக்கத்தில் உள்ளது. எனினும் பிரதான போக்குவரத்து சேவைகள் இதனூடாக நடைபெறுவதில்லை. அந்நாட்களில் கண்டியினுள் சென்று நகரைச் சூறையாடிய காரணத்தினால் இப்பாதை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வீதியின் பெயரான 'கண்டியன்கட்டு' என்பது இன்றும் பழுகாமத்தில் பல முதியோர்களால் பேசப்பட்டு வழக்கில் இருந்து வருகின்றது.

மட்டக்களப்பு பூர்வசரித்திரம் எனும் இலக்கியத்தில் வருகின்ற தாதன் கல்வெட்டில் "கண்டறிந்து மாயவன்றன் கருணை தனையுண்மையென்று விமலதருமன் எனும் வேந்தனை" என வருகின்றது. விமலதர்மசூரியன் ஆட்சிக்காலம் கி.பி 1594 - 1604 எனச் சரித்திரநூல்களில் அறியக்கிடைக்கின்றது. ஊருக்கு அண்மையில் அமைந்துள்ள குளத்தைச் சுற்றியுள்ள இடம் சிங்காரக்கண்டியென்று அழைக்கப்படு கின்றது. அத்துடன் அமைச்சர்பிட்டி எனும் பெயரால் அழைக்கப்படுவது அந்த அரசன் மற்றும் அவருக்குத் துணையாக வருகின்ற அமைச்சர்கள் தங்கியிருந்த இடமாகக் கருத முடியும்.

## 6. முடிவுரை

இவ்வாய்வானது வாய்மொழிக் கதைகளூடாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் கண்டி இராசதானிக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கண்டி இராசதானி நிலைத்திருந்த காலங்களில் மட்டக்களப்பில் ஐரோப்பியராட்சி நிலைத்திருந்தாலும் அவ்விராசதானி மன்னர்களுடன் நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளமை புலனாகின்றது. இராச்சிய பரிபாலனம், படையுதவிச் செயற்பாடுகள், போடி வன்னிமைத் தொடர்புகள் மூலம் இவை உறுதியாகின்றன.

### உசாத்துணை

[1] Vansina,J., Oral Tradition- A Study in Historical Methodology, Chicago: Aldine Pub. Co, 1969.

[2] Tylor.E.B., Primitive Culture, America, 1874.

[3] Robert Knox, An Historical Relation of the Island Ceylon, R. Chiswell, 1681.

[4] Silva.K.M.De., A History of Sri Lanka, Vijitha Yapa Publications, Colombo, 2003.

[5] கமலநாதன்.இ.சா., மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை, 2005.

[6] சந்திரசேகரம்.சி., இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2020.

[7] தங்கேஸ்வரி.க., கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, மணிமேகலை பிரசுரம், சென்னை. 2007.

[8] வெல்லவூர் கோபால், மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம், மனுவேதா வெளியீடு, 2011.

### நேர்காணல்

[9] புவனகேசரி - வயது 65

[10] தெய்வேந்திரன் - வயது 72